வானவில்

VAANAVIL
ISSUE – 40 APRIL 2014

இதழ் - 40 சித்திரை 2014

# 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோருவதே இன்றைய உடனடித் தேவை!

இலங்கையின் இனப்பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சிலர் இப்பிரச்சினை இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் உருவான ஒன்று எனச் சித்தரிக்க முயல்கின்றனர். உண்மையில் அது அப்படியல்ல. இலங்கையின் இனப்பிரச்சினை என்பது இலங்கையை தமது காலனித்துவ நாடாக நீண்ட காலம் வைத்திருந்த பிரித்தானியர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்று.

கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி என்ற போர்வையில் இந்தியாவில் காலடி எடுத்து வைத்த பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் படிப்படியாக இந்தியாவைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து அடிமைப்படுத்தியதுடன், இலங்கையையும் தமது காலனி நாடாக்கிக் கொண்டனர்.

ஒரு காலத்தில் இலங்கையை விட்டுப் போனாலும் தமது ஆதிக்கம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காக பிரித்தானியர்கள் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல எற்பாடுகளை முன்கூட்டியே செய்தனர். அதில் முக்கியமான ஒன்று இலங்கையில் தமிழ் - சிங்கள இனங்களிடையே



முரண்பாட்டை உருவாக்கியது.

அவர்கள் 1948 பெப்ருவரி 4ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் என்ற போர்வையில் இலங்கையை தமது அரைக்காலனி நாடாக்கிவிட்டு வெளியேறிய போது, தமக்கு விசுவாசமான ஐக்கிய தேசியக் கட்சியிடமே ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றனர். அத்துடன் தம்மால் உருவாக்கப்பட்ட தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வையும் ஏற்படுத்தாமலும் விட்டுவிட்டுச் சென்றது தற்செயலான நோக்கில் அல்ல.

பிரித்தானியரிடமிருந்து ஆட்சியைப் பெற்றுக்கொண்ட டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க அரசு பிரித்தானியரின் அதே கொள்கையைத் தொடர்ந்ததுடன், தமிழ் மக்களுக்கு எதிரான புதிய தாக்குதல்களையும் ஆரம்பித்தது.

அந்த அரசு வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தது. அத்துடன் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு இலங்கையின் மலையகப் பெரும் தோட்டங்களில் நவீன கொத்தடிமைக் கூலிகளாக வைக்கப்பட்டிருந்த தமிழ் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்கள் ஆக்கியது. அவ்வாறாக சுதந்திர இலங்கையில் இனப்பிரச்சினை விசுவரூபம் எடுப்பதற்கு ஐ.தே.க அரசே பிள்ளையார் சுழி போட்டது.

அதன் கேடுகெட்ட சிங்களப் பேரினவாதச் செயல்களுக்கு வடக்கு கிழக்குத் தமிழர்களின்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

## புத்தாண்டு வாழ்த்துக்கள்!

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் எமது தமிழ் – சிங்கள புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர்

இலங்கையில் அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தலும் பாராளுமன்றத்திற்கான தேர்தலும் 2016 ஆண்டில் நடாத்தப்பட வேண்டும். இதற்கு இன்னமும் இரு ஆண்டுகளே உள்ள நிலையில், ஜனாதிபதிக்கான தேர்வில், தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமென்ற முயற்சிகள் நாலாபக்கமும் நடந்து கொண்டிருக்கின்றன. கடைசியாக 2010 ஆண்டில் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக, முன்னாள் இலங்கை இராணுவத்தளபதி சரத் பொன்சேகா பொது வேட்பாராக நிறுத்தப்பட்டார். அத்தேர்தலில் மகிந்த ராஜபக்சவிற்கு 57,88% வாக்குகளும் சரத் பொன்சேகாவிற்கு 40,15% வாக்குகளும் கிடைத்தன. அத்தேர்தலில் சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சி, ஜனதா விமுக்தி பெரமுன மற்றும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்பன பகிரங்கமாக ஆதரித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியை நேரடியாக மக்களரல் தெரிவு செய்யப்படும் முறை இலங்கையில் 1977 ஆண்டு நிகழ்ந்த பாராளுமன்ற தேர்தலில் அமோக வெற்றியீட்டி பிரதமராக தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான அரசினால், 1978 ஆண்டில் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்டு, அவரே முதலாவது ஜனாதிபதியானார். அப்போது ஆணைப் பெண்ணாக்குவதும் பெண்ணை ஆணாக்குவதையும் தவிர்த்து அனைத்து அதிகாரங்களும் தன்னிடம் இருப்பதாக இலங்கையின் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறை பற்றி அவர் மிகவும் திமிருடன் கூறினார்.

நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறை அமுலுக்கு வந்த உடனேயே , ஐக்கிய தேசியக் கட்சியினர் தீவிர சிங்கள இனவாதம் பேசி அவசர காலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்றவற்றையும் கொண்டு வந்து தமிழ் மக்கள் மீது தீவிர ஒடுக்கு முறையையும் கட்டவிழ்த்து விட்டனர். அத்துடன் 1980 ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் பறிக்கப்பட்டது.

மேலும் 1982, 1988 இல் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தல்களில் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக்கட்சியே வெற்றி பெற்றதால், நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழித்து, மீண்டும் பாராளுமன்றத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்ற குரல் 1990 ஆண்டின் பின்னர் இலங்கையின் பிரதான சிங்கள எதிர்க்கட்சிகளிடையே மட்டுமன்றி ஆயுதம் தரித்த, பாராளுமன்றவாத தமிழ் கட்சிகளிடையேயும் வலுவாக ஒலிக்கத் தொடங்கியது.

17 வருடகாலம் கொடுங்கோல் ஆட்சி புரிந்த ஐக்கிய தேசியக்கட்சியை தோற்கடித்து, 1994 ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 62,28% வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற சந்திரிகா குமாரதுங்க, தனது தேர்தல் பிரச்சாரத்தில் தேர்தலில் வெற்றி பெற்றால், நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக கூறியே பதவிக்கு வந்தார். ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பான புதிய அரசியலமைப்பு ஒன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, மூன்றிலரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றுவதினூடாகவே அதனை ஒழிக்க முடியும். ஆனால் 2000 ஆண்டில் சந்திரிகா அரசினால் கொண்டுவரப்பட்ட அவ்வாறான புதிய அரசியலமைப்பு யோசனையொன்று பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதால், அவர் கூறியவாறு அந்த முறையை அவரால் ஒழிக்க முடியவில்லையெனக் கூறப்படுகின்றது.

2005, 2010 இல் நடந்த தேர்தல்களில் மகிந்த ராஜபக்சாவை தோற்கடிக்க முடியாத எதிர்க்கட்சிகள் 2016 ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலிலும், மீண்டும் அவரே வெற்றி பெறுவாரென எதிர்பார்க்கின்றனர். இதனால் அவருக்கெதிராக பொது வேட்பாளர்களாக நிறுத்தப்படுவதற்கு குறைந்தது ஏழு பிரமுகர்களது பெயர்கள் ஊடகங்களில் அடிபடுகின்றன. அத்துடன் இந்த பொது வேட்பாளர் வெற்றி பெறும் பட்சத்தில் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது. 2010 இல் சரத் பொன்சேகாவிற்கு இடமளித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இம்முறை பொது வேட்பாளர் தானே என்று முடிவெடுத்துள்ளார். இதனால் அவர் அமெரிக்காவிற்கு சென்று, ஆட்சி மாற்றத்தை எப்படி ஏற்படுத்ததுவது என்பது தொடர்பாக படித்துவிட்டும் வந்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, பின்னர் அந்த ஆட்சி முறையை இல்லாதொழிப்பதென்பது ஓர் இலட்சியப் பயணம். அதாவது அதிகாரத்திற்கு வந்த பின்னர், அந்த முறையினை அகற்றுவதற்கு எவரும் முன்வர மாட்டார்கள். 1978 முன்னர் இருந்த பாராளுமன்ற ஆட்சி முறையா அல்லது தற்போதைய ஆட்சி முறையா இலங்கைக்கு பொருத்தமானது என்பது பற்றி எவருக்கும் தெரியாது. ஏனெனில் இனப்பிரச்சனை உட்பட மக்களின் பல பிரச்சனைகள் இரு முறைகளாலும் தீர்க்கப்படாமலிருக்கின்றன. *

---

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com



1971 ஏப்பிரல் கிளர்ச்சிக்கு முன்னதாக 27.02.1971 இல் கொழும்பிலுள்ள ஹைட் பார்க்கில் ரோகண வீஜேவீர உரையாற்றுகிறார்.

# 'ஜே.வி.பி'யின் 1971 ஏப்ரல் ஆயுதக் கிளர்ச்சியின் 43ஆவது ஆண்டு நினைவாக – ஒரு கண்ணோட்டம்

*சுப்பராஜன்*

**'ஜே.வி.பி'** என்று அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி அல்லது ஜனதா விமுக்தி பெரமுன என்ற அமைப்பு 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி இலங்கையில் நடாத்திய ஆயுதம் தாங்கிய கிளர்ச்சி நடைபெற்று 43 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்தக் கிளர்ச்சியின் நினைவு தினத்தை அந்த இயக்கம் வருடாவருடம் நினைகூர்ந்து நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது. அதன் பின்னர் அவர்களது தலைவர் ரோகண விஜேவீரவின் மரணத்தில் முடிவடைந்த இன்னொரு கிளர்ச்சியை அந்த இயக்கம் 1988 – 88 காலகட்டத்தில் நடாத்தியிருந்த போதிலும், அந்தக் கிளர்ச்சி பற்றி ஜே.வி.பி பெரிதாக நினைவு நிகழ்ச்சிகள் எதையும் நடாத்துவதில்லை.

எனவே இந்தக் கட்டுரையின் பிரதான நோக்கமும் ஜே.வி.பியின் 1971ஆம் ஆண்டுக் கிளர்ச்சி பற்றி ஆராய்வதே. அப்படி ஆராய்வதற்கு ஒரு நோக்கமும் இருக்கிறது. அதாவது ஜே.வி.பி 1971இலும் 1988 – 89 காலகட்டத்திலும் நடாத்திய ஆயுதக் கிளர்ச்சிகள் தோல்வியில் முடிவடைந்ததுடன், பெருமளவு அழிவுகளைக் கொண்டு வந்தவையாக இருந்த போதிலும், அவை பற்றி அந்த இயக்கம் எந்தவிதமான சுய – விமர்சனமும் இன்றியே அவற்றைக் கொண்டாடி வருகின்றது. மரணித்துப்போன தனது உறுப்பினர்களுக்காக அந்த இயக்கம் நினைவஞ்சலி செலுத்துவதில் தவறு சொல்வது நமது நோக்கமல்ல. ஆனால் தான்விட்ட அரசியல் மற்றும் நடைமுறைத் தவறுகளை அவ்வியக்கம் சுயவிமர்சன ரீதியில் பார்க்காமல் செயற்படுவதும், அந்தப் பாதையிலேயே இன்றும்கூடப் பயணிப்பதும்தான் பாரதூரமான தவறாகும்.

எனவே அவர்களது தவறைச் சுட்டிக்காட்டுவதும் – குறிப்பாக 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் அனுபவங்களை நினைவுகூர்வதும், இன்றைய சந்ததிக்கு இதைத் தெரிவிப்பதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஜே.வி.பியின் 1971 ஆயுதக் கிளர்ச்சியைப் பற்றி ஆராய்வதற்கு முன்பாக அந்த இயக்கத்தை ஸ்தாபித்த ரோகண விஜேவீரவின் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்பது பயனுள்ளது.

விஜேவீரவின் தந்தையார் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்தவரும், தென் மாகாணத்திலுள்ள அக்குரஸ்ஸ தேர்தல் தொகுதியில் பல தடவைகள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானவருமான டொக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க அவர்களின் நெருங்கிய ஆதரவாளராக இருந்தவர். சின்ன வயதில் விஜேவீரவுக்கு ஏதாவது சுகவீனம் வரும் நேரங்களில் அவரது தகப்பனார் டொக்டர் விக்கிரமசிங்க அவர்களிடமே அவரைக் கொண்டுபோய் காட்டுவது வழமை. அதற்கு தோழர் விக்கிரமசிங்க பணம் எதுவும் பெறுவதும் இல்லை.

இந்த உறவு காரணமாக தந்தையின் வழியைப் பின்பற்றி விஜேவீரவும் தனது மாணவப் பருவத்திலேயே கம்யூனிஸ்ட் அரசியலால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அதன் காரணமாக அவருக்கு சோவியத் யூனியனின் பட்ரிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்தில் (இது ஏகாதிபத்தியவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட கொங்கோவின் தேசபக்த விடுதலைப்போராளி பட்ரிஸ் லுமும்பாவின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது. இங்கு கல்வி கற்பதற்காக ஆயிரக்கணக்கான ஆசிய – ஆபிரிக்க மாணவர்களுக்கு வருடந்தோறும் புலமைப்பரிசில் வழங்கப்படுவது வழக்கம்) உயர்கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் கிடைத்தது.

ஆனால் அங்கு அவர் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் போது அது இடைநிறுத்தப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். அதற்குக் காரணம் அப்போது நடைபெற்ற சோவியத் – சீன தத்துவார்த்த விவாதத்தின் போது, விஜேவீர சீன நிலைப்பாட்டுக்கு ஆதரவாக இருந்ததுதான் என்று கூறப்பட்டது.

நாடு திரும்பிய விஜேவீர இலங்கையில் பிரேம்லால் குமாரசிறியை பொதுச்செயலாளராகவும், நா.சண்முகதாசனை தேசிய அமைப்பாளராகவும் (பின்னர் ஒரு கட்டத்தில் பிரேம்லாலை திட்டமிட்டு கட்சியிலிருந்து வெளியேற்றிய சண்முகதாசன், 1969இல் நடைபெற்ற கட்சியின் 9ஆவது தேசிய மாநாட்டில் சர்வ அதிகாரங்களும் கொண்ட பொதுச்செயலாளராகத் தன்னை நியமித்துக் கொண்டார்) கொண்டு செயற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் சீனசார்பு அணியினருடன் தன்னை இணைத்துக்கொண்டு, அதன் வாலிப அணியில் தீவிரமாக வேலைசெய்யத் தொடங்கினார்.

ஆனால் சீனசார்புக் கட்சிக்கு விஜேவீர மீது தொடர்ந்தும் சந்தேகம் இருந்துகொண்டே வந்தது. அதாவது அவரை சோவியத் யூனியனின் உளவு ஸ்தாபனமான கே.ஜி.பிதான் தமது கட்சியைச் சீர்குலைப்பதற்காக திட்டமிட்டு அனுப்பி வைத்துள்ளது என்ற கருத்து அக்கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் சிலரிடையே ஏற்பட்டிருந்தது. அப்படியான சந்தேகம் வரும் வகையில் விஜேவீரவும் மிகவும் தீவிரமாக நாடு முழுவதும் சுற்றிச்சுழன்று அக்கட்சியின் அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

அதுமட்டுமின்றி, சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதப்புரட்சி பற்றிப் பேசினாலும் அதற்கான நடைமுறைத் தயாரிப்புகள் எதிலும் ஈடுபட்டிருக்கவில்லை என்பதை விஜேவீர வாலிப அணிகளிடையே மறைமுகமாகப் பிரச்சாரம் செய்ததுடன், கட்சியில் முக்கிய பதவி வகித்த சண்முகதாசனின் ஓரளவு ஆடம்பரமான வாழ்க்கையையும் விமர்ச்சித்து வந்தார். அத்துடன் இன்னொரு முக்கியமான கருத்தையும் – அதாவது சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையில் சண்முகதாசன் போன்ற ஒரு தமிழரின் தலைமையில் புரட்சி செய்வது நடைமுறைச்சாத்தியமற்றது என்ற கருத்தையும் பிரச்சாரம் செய்து வந்தார்.

இந்த நிலைமையில் 1965இல் கட்சியின் தேசிய வாலிப மாநாடு பதுளையில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கான தயாரிப்பு வேலைகளில் யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் எல்லாப் பிரதேசங்களுக்கும் விஜேவீர நேரடியாகச் சென்று செயல்பட்டார். அவரது நோக்கம் இந்த மாநாட்டின் மூலம் கட்சியின் வாலிப அணியான 'இலங்கை வாலிப சங்க சம்மேளன'த்தின் பொதுச்செயலாளர் பதவியைக் கைப்பற்றுவதாக இருந்தது.

மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போரிட்ட சிங்கள தேசியவாதி புரன்அப்பு மீது சத்தியப்பிரமாணம் எடுக்கும் நிகழ்ச்சியையும் விஜேவீரவே ஏற்பாடு செய்திருந்தார். இந்த நிகழ்வு பிற்காலத்தில் அவர் சிவப்புக் கொடியை ஏந்திக்கொண்டு, மார்க்சிச சுலோகங்களை உச்சரித்த போதிலும், நடைமுறையில் ஒரு சிங்களத் தேசியவாதியாகச் செயல்பட்டதற்கான ஒரு முன்னோடி சமிக்ஞை என்று கூறலாம்.

ஆனால் விஜேவீரவின் பொதுச்செயலாளர் கனவு நனவாகவில்லை. தனது அதிகாரத்துக்கு சாவல் விடுபவர்களை காலத்துக்காலம் மிகவும் தந்திரமாக ஓரம்கட்டுவதில் வல்லவரான சண்முகதாசன், திட்டமிட்ட முறையில் விஜேவீர பொதுச்செயலாளர் பதவிக்கு வராமல் தடுத்துவிட்டார். அவர் கம்பஹாவைச் சேர்ந்த டி.ஏ.குணசேகர என்பவரை வாலிப சம்மேளனத்தின் தலைவராக ஆக்கியதுடன், கேகாலையைச் சேர்ந்த ஏ.ஆர். எட்மண்ட் என்பவரைப் பொதுச்செயலாளராகவும் ஆக்கிவிட்டார். அதுமாத்திரமல்லாமல் விஜேவீர ஒரு சிங்கள இனவாதி என்ற பிரச்சாரத்தையும் முடுக்கிவிட்டார்.

இந்தச் சூழ்நிலைகள் காரணமாக விஜேவீரவை சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து ஒதுங்க வைத்தது. அதன் பின்னரே அவர் தனது சொந்த அரசியல் இயக்கத்துக்கான – ஜே.வி.பியை அமைப்பதற்கான முடிவை எடுத்தார்.

1966ஆம் ஆண்டுமுதல் விஜேவீர தீவிரமான அரசியல் வேலைகளில் ஈடுபடத் தொடங்கினார். முதலில் அவர் செய்தது சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்த வாலிபர்களைத் தனது பக்கம் இழுத்ததுதான். அதற்காக அவர் சில தந்திரோபாயங்களைக் கையாண்டார். சண்முகதாசன் யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அரசியல் வேலைகள் சம்பந்தமாகச் சென்றால், கட்சிக்கு ஆதரவான பொதுமக்களின் வீடுகளிலோ அல்லது கட்சி உறுப்பினர்களின் வீடுகளிலோ (அவர்கள் வசதியானவர்களாக இருந்தாலும் கூட) தங்குவதில்லை. அவர் அநேகமாக வாடிவீடுகளில்தான் (Rest House or Guest House) தங்குவது வழமை. அதற்குப் பெருந்தொகை பணச்செலவு பிடிக்கும். எனவே விஜேவீர என்ன செய்தார் என்றால், சண்முகதாசன் தங்கிய வாடிவீடுகளுக்குச் சென்று அங்கு அவரது செலவு விபரங்களைத் திரட்டி வந்து, தொழிலாளர்களிடமும் கட்சி உறுப்பினர்களிடமும் சேர்க்கும் சந்தாப் பணத்தை அவர் இவ்வாறுதான் ஊதாரித்தனமாகச் செலவு செய்கிறார் என்ற பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டார்.

அடுத்ததாக, சண்முகதாசன் போன்ற ஒருவர் எவ்வளவுதான் அழகாக மார்க்சியம் பேசினாலும், அவர் ஒரு தமிழராக இருப்பதால் சிங்கள மக்கள் அவரது தலைமையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் பிரச்சாரம் செய்தார்.

அத்துடன் சண்முகதாசன் சோவியத்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினரைப் பார்த்து 'திரிபுவாதிகள்', 'பாராளுமன்ற சந்தர்ப்பவாதிகள்' என விமர்ச்சித்தாலும், சண்முகதாசனும் அதேவகையான தொழிற்சங்கவாத சீர்திருத்தவாத வேலைகளில்தான் ஈடுபட்டிருக்கிறார், அவர் ஒருபோதும் ஆயுதப்புரட்சியில்

ஈடுபடப் போவதில்லை எனவும் விஜேவீர பிரச்சாரம் மேற்கொண்டார்.

இந்தப் பிரச்சாரங்கள் சண்முகதாசன் அணியில் இருந்த சிங்கள இளைஞர்களைக் கவர்ந்து இழுத்ததுடன், சாதாரண சிங்கள இளைஞர்களையும் கவர்ந்தது. அதனால் 1966இல் வடபகுதியில் சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொண்ட தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தால் ஆகர்சிக்கப்பட்டுத் தமிழ் இளைஞர்கள் அந்தக் கட்சியை நோக்கி வந்த அதேநேரத்தில், சிங்களப் பகுதி இளைஞர்கள் அக்கட்சியை விட்டு விலகி விஜேவீரவின் ஜே.வி.பியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர்.

இது சண்முகதாசனின் கட்சியை எவ்வளவு தூரம் பாதித்தது என்றால், கம்பஹா மாவட்டத்தில் இருந்த அவரது வாலிபர் சங்கங்களில் 15 வரை விஜேவீரவுடன் சேர்ந்து கொண்டதுடன், அவர் நியமித்த அவரது வாலிப சம்மேளனத் தலைவர் டி.ஏ.குணசேகரவும் இறுதியில் ஜே.வி.பியுடன் இணைந்து கொண்டார். (1970இல் சண்முகதாசன் கட்சியின் சார்பாகப் போட்டியிட இருந்த கம்பஹாத் தொகுதியின் நீண்டகாலப் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.டி.பண்டாரநாயக்கவை சண்முகதாசன் திட்டமிட்டு கழுத்தறுத்து அவரது அரசியல் எதிர்காலத்தை சூனியமாக்கியதால் அவரும் பின்னர் ஜே.வி.பியுடன் இணைந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது)

விஜேவீர தனது ஜே.வி.பி இயக்கத்தை ஸ்தாபித்ததும் இரண்டு முக்கியமான வேலைகளைச் செய்தார். ஒன்று, இளைஞர்களை அணிதிரட்டுவதற்காக அவர்களை வென்றெடுக்கும் பொருட்டு 5 பாடத்திட்டங்கள் அடங்கிய அரசியல் வகுப்புகளை ஏற்பாடு செய்தார். இரண்டாவது தனது உறுப்பினர்கள் மூலம் பொதுமக்களிடம் பாவனையில் இருந்த சட்டபூர்வ – சட்டவிரோத துப்பாக்கிகள் எல்லாவற்றையும் சேகரித்ததுடன், தனது உறுப்பினர்களுக்கு அவற்றின் மூலம் ஆயுதப் பயிற்சிகளையும் வழங்கினார். கூடுதலான இளைஞர்கள் ஏழை விவசாயிகள் நிறைந்த தென் மாகாணம், வட மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், ஊவா மாகாணம் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டம் போன்ற பகுதிகளில் இருந்து திரட்டப்பட்டனர்.

ஜே.வி.பியின் 5 அரசியல் வகுப்புகளில் ஒன்று பொருளாதாரம் பற்றியது. (இந்தக் கட்டுரையாளர் வவுனியாவில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் கோழி வளர்ப்பது பற்றிய கருத்தரங்கம் என்ற போர்வையில் நடாத்தப்பட்ட ஜே.வி.பியின் அரசியல் வகுப்பில் நேரடியாகக் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது) அதில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிரான கருத்துகள் முன்வைக்கப்பட்டன. சிங்கள மக்களின் முன்னோடிகள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு – குறிப்பாக பிரித்தானிய – எதிராகப் போரிட்ட வரலாறும் உணர்ச்சி மிகுந்த பாணியில் சித்திரிக்கப்பட்டது.

இந்த வகுப்புகளில் மிக முக்கியமான ஒரு வகுப்பு 'இந்திய விஸ்தரிப்புவாதம்' பற்றியது. உண்மையில் இந்தப் பதம் சீனாவின் ஊடகங்களால் 1962இல் நடைபெற்ற இந்திய – சீன எல்லை யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்டதாகும். அந்தச் சொற்பதத்தை இலங்கையில் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர் இந்தியாவுக்கு எதிரான தமது பிரச்சாரங்களில் பயன்படுத்தி வந்தனர். அவர்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியதின் நோக்கம், இந்தியா இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் பின்பற்றி வந்த தேச விஸ்தரிப்புவாதக் கொள்கையை விமர்ச்சிப்பதற்காகவே.

ஆனால் முன்னர் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருந்த விஜேவீர அந்தச் சொற்பதத்தை வேறு நோக்கத்துக்காக – அதாவது தனது சிங்களக் குறுந்தேசியவாத நோக்கத்துக்காகப் பயன்படுத்த ஆரம்பித்தார். அவர் இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், அதேநேரத்தில் 20ஆம் நூற்றாண்டின் நவீன கொத்தடிமைகளாகவும் இருந்த இந்திய வம்சாவழி மலையகத் தோட்டத் தொழிலாளர்களை குற்றம்சாட்டுவதற்காக அதைப் பயன்படுத்தினார். அதாவது இந்தியாவுடன் எவ்வித பௌதீகத் தொடர்புகளும் அற்ற, அதேநேரத்தில் வெறும் கலாச்சார மற்றும் உணர்வுரீதியிலான தொடர்புகளை மட்டும் வைத்திருந்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பார்த்து 'இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கைக்கூலிகள்' என மிகவும் அபாண்டமான, மன்னிக்க முடியாத ரீதியில் ஜே.வி.பி குற்றம்சாட்டியது (அதனால்தான் பிற்காலத்தில் இ.சந்திரசேகரன் என்ற இந்திய வம்சாவழித் தமிழர் ஒருவரை ஜே.வி.பி தனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்து, அவர் மலையக மக்களுக்கென ஒரு தொழிற்சங்கத்தை அமைத்த போதும், இன்றுவரை மலையகப் பகுதிகளில் ஜே.வி.பியால் செல்வாக்குப்பெற முடியாமல் இருக்கின்றது).

தமிழ் இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறமுடியாவிட்டாலும் சாதாரண சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஜே.வி.பியின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. அதற்கு இன்னொரு காரணம் 1970ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஜே.வி.பி சிறீலங்கா – சமசமாஜ – கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டமைப்பான 'மக்கள் முன்னணி'க்கு வேலை செய்திருந்ததால், அதன் மூலம் ஐ.தே.கவுக்கு எதிரான மக்கள் மத்தியில் அது பரவலான தொடர்புகளைப் பெற்றிருந்தது. அத்தேர்தலில் மக்கள் முன்னணி பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற்று அமோக வெற்றியீட்டியிருந்தது. ஆனால் ஜே.வி.பி தேர்தலில் வேலை செய்திருந்தாலும் அதன் தலைமையின் முழுநோக்கமும் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றின் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகவே இருந்தது.

ஜே.வி.பியின் இந்த நோக்கம் குறித்தும், அதற்காக அது செய்துவரும் தயாரிப்புகள் குறித்தும் அரசாங்கமோ, ஏனைய அரசியல்



**1971 ஏப்பிரல் கிளர்ச்சியில் தோல்வியுற்ற பின்னர் சரணடைந்த ஜே.வி.பியினரது இளம் உறுப்பினர்கள்**

கட்சிகளோ பாரதூரமாக எடுக்காமல் இருந்து வந்தன. ஆயுதப்போராட்டம் குறித்து தீவிரமாகப் பேசிவந்த சண்முகதாசன் கூட அதைப் பெரிதாக எடுக்கவில்லை. அவர் ஒருமுறை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசும்போது, அவரிடம் ஜே.வி.பியின் வளர்ச்சி பற்றி சில மாணவர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் சொன்ன பதில், “ஜே.வி.பியினர் ஒரு கல்லைக் கூடத் தூக்கியெறிய லாயக்கற்றவர்கள்” என்பதாகும்!

அதேபோல அவர் யாழ்ப்பாணத்தில் கட்சி உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றில் பேசும்போதும் இதுபற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கும் அவர் சொன்ன பதில், “தென்னிலங்கையில் ஜே.வி.பி என்றொரு இயக்கம் பலமானதாக இல்லை. முதலாளித்துவப் பத்திரிகைகள்தான் எமது செல்வாக்கை மட்டம் தட்டுவதற்காக ஜே.வி.பி பற்றிய செய்திகளை ஊதிப் பெருப்பித்து செய்தி வெளியிடுகின்றன” என்பதாகும்!!

ஆனால் பொலிசார் ஜே.வி.பி மீது ஒரு கண் வைத்துக்கொண்டே இருந்து வந்தனர். அதனால்தான் ஜே.வி.பி ஒரு திட்டமிட்ட முழுமையான தாக்குதலை நடாத்துவதற்கு சில நாட்கள் முன்னதாக – அதாவது 1971 ஏப்ரல் 02ஆம் திகதி வெள்ளவாயாவில் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டுத் கொழும்புக்குத் திரும்பிக் கொண்டிருந்த ஜே.வி.பியின் தலைவர் ரோகண விஜேவீரவையும் அவருடன் பயணித்த சிலரையும் பொலிசார் கைதுசெய்தனர்.

தமது தலைவர் விஜேவீர கைதுசெய்யப்பட்ட செய்தி கிடைத்தவுடன், ஏனைய தலைமை உறுப்பினர்கள் தாம் திட்டமிட்டிருந்த நாளுக்கு முன்னதாகவே ஏப்ரல் 04ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர், அதாவது 05ஆம் திகதி அதிகாலை பொலிஸ் நிலையங்கள் மீது தமது தாக்குதலை ஆரம்பித்தனர். ஜே.வி.பியின் பிரதான இலக்கு பொலிஸ் நிலையங்களாகவே இருந்தன. அரசு இயந்திரத்தின் பிரதான அங்கம் ஆயுதப்படைகள்தான் என்ற மார்க்சிய தத்துவத்தைப் படித்திருந்த விஜேவீர, அதிலும் ஆயுதப்படைகளிலும் இராணுவம்தான் பிரதானமானது என்பதை எப்படி மறந்தார் என்பது புரியவில்லை.

அதுமட்டுமல்ல, அவர் முதலாளித்துவ அரசு இயந்திரம் குறித்து சிறுபிள்ளைத்தனமான புரிந்துணர்வைக் கொண்டிருந்தார் என்பதற்கு ஒரு உதாரணம், நாட்டின் ஏனைய பகுதிகளில் தனது இயக்கம் தாக்குதலை நடாத்த, தலைநகர் கொழும்பை இலங்கை அரச இயந்திரத்தின் பிரதான அங்கமான இராணுவம் கைப்பற்றித் தம்மிடம் ஒப்படைக்கும் என்று நம்பியிருந்ததுதான். முதலாளித்துவ அரசின் இராணுவம் நாட்டைக் கைப்பற்றுவது என்பது, இராணுவச் சதியே தவிர மக்கள் புரட்சி அல்ல என்பது ஜே.வி.பிக்குத் தெரியவில்லையா அல்லது அவர்களும் ஒரு சதி நடவடிக்கையின் மூலம்தான்

ஆட்சியைக் கைப்பற்றலாம் என நம்பியிருந்தார்களா என்பது தெரியவில்லை.

ஆரம்பத்தில் ஜே.வி.பியின் தாக்குதலால் அரசாங்கம் நிலை குலைந்தது போலத் தோன்றினாலும், விரைவிலேயே அரசு தன்னைச் சுதாரித்துக்கொண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. மாகோவிலும் கேகாலையிலும் மட்டுமே ஜே.வி.பியினர் பொலிஸ் நிலையங்களை ஒரு கிழமை வரையில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இந்தக் கிளர்ச்சியின் போது சுமார் 6,000 வரையிலான ஜே.வி.பியினர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் சரியான தொகையை ஜே.வி.பி, அரசாங்கம் உட்பட எந்தவொரு அமைப்பும் இதுவரை சரியாகக் கணக்கிட்டதாகத் தெரியவில்லை. (ஜே.வி.பி 1988-89 காலகட்டத்தில் மேற்கொண்ட இரண்டாவது கிளர்ச்சியின் போது தலைவர் விஜேவீர மற்றும் உயர்மட்டத் தலைவர்கள் உட்பட சுமார் 60,000 பேர் வரை பிரேமதாச அரசாங்கத்தால் கொன்று குவிக்கப்பட்டனர்!).

ஜே.வி.பியின் 71ஆம் ஆண்டுக் கிளர்ச்சியை அடக்குவதற்காக சிறீமாவோவின் அரசாங்கத்துக்கு அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திராகாந்தி ஹெலிகொப்ரர்களையும், சில இராணுவ வீரர்களையும் உடனடியாகவே அனுப்பி வைத்தார்.

இந்தக் கிளர்ச்சிக்கு வட கொரியா ஜே.வி.பிக்கு ஆயுதங்கள் வழங்கயதாக ஒரு கட்டுக்கதையை ஐ.தே.கவும், அரசாங்கத்தினுள் இருந்த வலதுசாரிகளும் அவிழ்த்துவிட்டனர். அந்த நேரத்தில் தண்ணீர் எடுப்பதற்காக கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த ஒரு வட கொரியக் கப்பலே ஆயுதங்களைக் கொண்டு வந்ததாக வதந்திகள் பரப்பினர். அதற்கு இன்னொரு காரணம் ஜே.வி.பியினர் கொழும்பிலிருந்த வட கொரியத் தூதரகத்திடமிருந்து சில திரைப்படங்களைப் பெற்று அதைத் திரையிட்டுத் தமது பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தியிருந்தனர்.

இன்னொரு பக்கத்தில் சீனாவையும் இந்தக் கிளர்ச்சியில் சம்பந்தப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விஜேவீர ஆரம்பத்தில் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்ததால் இந்தப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது எனக் கருதப்பட்டாலும், இது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்டது. அதன் காரணமாக சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் நா.சண்முகதாசன், அக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் ஆரியவன்ஸ குணசேகர, மலையக தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்க தலைவர்களில் ஒருவரான ஓ.ஏ.இராமையா உட்படப் பலரைப் பொலிசார் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்தனர். வேறு பலரைத் தேடியும் வந்தனர்.

ஆனால் ஜே.வி.பியின் கிளர்ச்சி ஒரு எதிர்ப் புரட்சி நடவடிக்கை எனக் கண்டித்து சீனப் பிரதமர் சூ என் லாய் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததுடன், அந்த நேரத்தில் இலங்கைக்கு உதவும் பொருட்டு 15 கோடி ரூபாவை வட்டி இல்லாக் கடனாகவும் வழங்கியது.

இந்தக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி அரசாங்கத்துக்குள் இருந்த வலதுசாரி அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தலைமையிலான ஒரு குழுவினர் சிறீமாவோவை பதவியிலிருந்து இறக்கிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றவும் திட்டமிட்டிருந்தனர். அவர்கள், "இந்த நெருக்கடியான நேரத்தில் சிறீமாவோ போன்ற ஒரு பெண்மணியால் நாட்டை நிர்வகிக்க முடியாது. பீலிக்ஸ் போன்ற உறுதியான ஒருவர்தான நாட்டை நிர்வகிக்கத் தகுதியானவர்" என்ற பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர். ஆனால் சிறீமாவோ தலைமையிலான முற்போக்கு சக்திகள் அதற்கு இடம் கொடாமல் அந்த முயற்சியை முறியடித்து விட்டனர்.

உண்மையில் விஜேவீர தன்னை மார்க்சிஸ — லெனினிஸவாதி என்று சொல்லிக்கொண்டாலும், அவர் இரண்டு விதமான சக்திகளால் பயன்பட்டிருக்கிறார் என்பதே உண்மை. விஜேவீர சோவியத் யூனியனில் இருந்து திரும்பித் தனது ஜே.வி.பியைத் தொடங்கிய காலம் இலங்கையிலும் உலகம் முழுவதும் சோவியத் அதிபர் குருசேவின் நவீன திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்து, மாஓசேதுங் சிந்தனை எல்லோரையும் தீவிரமாக ஆகர்சித்திருந்த காலம்.

அதை முறியடிப்பதற்காக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி விஜேரவைப் பயன்படுத்தியிருக்கலாம் என்பதற்கான சில சான்றுகள் உள்ளன. விஜேவீர தனது கட்சியின் சித்தாந்தமாக மார்க்சிஸ - லெனினிஸத்தை ஏற்பதற்குப் பதிலாக சேகுவாராவின் தத்துவங்களையே பின்பற்றினார். அதில் கவர்ச்சி ஏற்படுத்துவதற்காக தானே சேகுவேராவின் தோற்றத்தில் தன்னை உருமாற்றிக்கொண்டார். மாஓசேதுங் சிந்தனை மக்கள் யுத்தப்பதையை வலியுறுத்துவது. சேகுவேரா ஒரு உண்மையான புரட்சிவாதியாக இருந்தபோதும் அவரது பாதை ஓரளவு குட்டி முதலாளித்துவ வீர சாகசச் செயல்களை ஒத்தது. அதனால்தான் மாஓசேதுங் சிந்தனையைப் பின்பற்றுபவர்களைத் திசைதிருப்புவதற்காக சோவியத் யூனியன் அந்தக் காலகட்டத்தில் சேகுவேராவின் 'பொலிவியன் டைரி'யைத் திட்டமிட்டு வெளியிட்டது.

அடுத்ததாக, தொழிலாள வர்க்கமே ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தலைமைச் சக்தி என்பதும், தொழிலாளி - விவசாயி ஐக்கியமே புரட்சியின் அடிப்படை உந்து சக்தி என்பதுமே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலைப்பாடு. ஆனால் ஜே.வி.பி இளைஞர்களே புரட்சியின் அடிப்படைச் சக்தி என்ற குட்டி முதலாளித்துவச் சித்தாந்தத்தைப் பின்பற்றினார்கள். உண்மையில் இளைஞர்கள் எந்தவொரு விடயத்திலும் உற்சாகமான ஒரு சக்தியாகத் திகழுவார்கள் என்ற

போதிலும், இளைஞர்கள் என்றொரு தனியான வர்க்கம் இல்லை என்பதை அனைவரும் அறிவர்.

இவற்றைவிட, ஜே.வி.பிக்கும் ஐ.தே.கவுக்கும் இடையிலான தொடர்பும் சந்தேகத்துக்கு உரியது. ஏனெனில் 1970 தேர்தலில் சிறீலங்கா - சமசமாஜ - கம்யூனிஸ்ட் கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு உழைத்த ஜே.வி.பி, தேர்தல் முடிந்து ஒரு வருடத்துக்குள்ளாகவே, அரசாங்கம் மக்கள் மத்தியில் எதுவித வெறுப்பையும் சந்தித்திராத சூழலில் ஒரு ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பித்தது சந்தேகத்துக்கு உரியது.

அத்துடன் 1971 ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு கூட்டம் ஒன்றில் பேசிய அன்றைய எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க தலைவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, தான் இன்று ஒரு இளைஞனாக இருந்தால் ஜே.வி.பியில்தான் இருப்பேன் எனப் பேசியிருந்தார். அந்தப் பேச்சை அன்று ஜே.ஆரின் குடும்பப் பத்திரிகையாக இருந்த லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ‘டெய்லி நியூஸ்’ பத்திரிகை முன்பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்தது. அதே செய்தியை ஜே.வி.பி கிளர்ச்சியை ஆரம்பிப்பதற்கு மூன்று நாட்கள் முன்னதாக ஏப்ரல் 02ஆம் திகதி ‘டெய்லி நியூஸ்’ மீண்டும் மறுபிரசுரம் செய்தது!

ஒரு பத்திரிகை, அதுவும் வலதுசாரிகளின் ஒரு பத்திரிகை தீவிர இடதுசாரிகள் என்று சொல்லப்படும் ஜே.வி.பியைப் புகழ்ந்து இலங்கையின் படு வலதுசாரிப் பிற்போக்குவாதியும், அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடியுமான ஜே.ஆரின் பேச்சை சில நாட்களுக்குள் இரண்டு தரம் திரும்பத் திரும்பப் பிரசுரித்ததின் மர்மம் அல்லது நோக்கம் என்ன? (ஜே.ஆர். 1977இல் ஆட்சிக்கு வந்ததும் விஜேவீரவையும் ஏனைய ஜே.வி.பித் தலைவர்களையும் உடனடியாகச் சிறையிலிருந்து விடுதலை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது)

அதுமாத்திரமில்லாமல் ஜே.வி.பியின் 71ஆம் ஆண்டுக் கிளர்ச்சியில் ஐ.தே.கவுக்கு இன்னொரு வகையிலும் பங்கு இருந்தது.

1965இல் ஐ.தே.க டட்லி சேனநாயக்க தலைமையில் ஏழு கட்சி ஆட்சி அமைத்தபோது, விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கென ‘விவசாயப்படை’ என்ற போர்வையில் ஐ.தே.கவுக்கு ஒரு குண்டர் படையை அமைத்தது. அதற்குப் பொறுப்பாக முன்னாள் இராணுவ கப்டனான செனவிரத்ன என்பவரை நியமித்தது. அந்த அரசில் தமிழரசு — தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்ததால், தமிழ் பகுதிகளில் அந்தப் படையில் அந்தக் கட்சிகளின் ஆதரவாளர்கள் சேர்க்கப்பட்டனர்.

1970 தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாக அந்தப் படையைக் கலைத்த ஐ.தே.க அரசாங்கம் அதில் இணைந்திருந்த அனைவருக்கும் தலா 500 ரூபா வழங்கி சிங்களப் பகுதிகளில் ஐ.தே.கவுக்கும், தமிழ் பகுதிகளில் தமிழ் காங்கிரசுக்கும் (தமிழரசுக்கட்சி ஆறுமாதங்களுக்கு முன்னர் அரசிலிருந்து விலகியிருந்தது) தேர்தல் வேலை செய்யும்படி ஆலோசனையும் வழங்கி வீட்டுக்கு அனுப்பியது.

ஆனால் நடந்தது என்னவென்றால், ஐ.தே.க ஆதரவாளரான கப்டன் செனவிரத்ன கணிசமான சிங்கள விவசாயப்படை உறுப்பினர்களையும் சேர்த்தக்கொண்டு ஜே.வி.பியில் சேர்ந்து கொண்டார். அதில் சேர்ந்துகொண்ட அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

முடிவாகத் தொகுத்துப் பார்த்தால் ஜே.வி.பி என்னதான் தன்னை ஒரு மார்க்சிசக் கட்சி என்று சொல்லிக் கொண்டாலும், உண்மையில் அது ஒரு சிங்கள தேசியவாத குட்டி முதலாளித்துவக் கட்சி என்பதே உண்மையாகும். அதுமாத்திரமல்லாமல் அது முன்னர் சோவியத் திரிபுவாதிகளாலும், ஐ.தே.க பிற்போக்குவாதிகளாலும் பயன்படுத்தப்பட்ட ஒரு கட்சியுமாகும். அது வருங்காலத்தில் ஏகாதிபத்தியத்தாலும், மீண்டும் ஐ.தே.கவினாலும் பயன்படுத்தப்படலாம் என்பதை அதன் பிந்தைய வரலாறும் எடுத்துக் காட்டுகிறது.

இந்த வரலாற்றுப் படிப்பினைகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, ஜே.வி.பியை அதற்கு உரிய இடத்தில் வைப்பது ஒவ்வொரு உண்மையான மார்க்சிஸ — லெனினிஸவாதியினதும் கடமையாகும்.

(ஜே.வி.பியின் 1971 ஆயுதக் கிளர்ச்சி தமிழ் பகுதிகளில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து அடுத்த இதழில் (மே) பார்ப்போம்)

# துளிகள்

உலகில் ஒவ்வொரு நாளும் கர்ப்பம் மற்றும் குழந்தைப்பேறு சம்பந்தமான காரணிகளால் 800 பெண்கள் மரணமடைவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது! இவர்களில் பெரும்பாலானவர்கள் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்கள். அதேவேளை உலகில் தினமும் 18,000 ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளும் இறப்பதாகத் தெரிக்கப்பட்டுள்ளது!!

பூமியின் வட துருவமான ஆர்க்ரிக் (Arctic) பகுதிக்கு உரிமை கோருவதில் ரஸ்யா, அமெரிக்கா, கனடா, டென்மார்க், நோர்வே என்பன போட்டிபோட்டு வருகின்றன. பூமியில் உள்ள மொத்த எண்ணெய், எரிவாயு என்பவற்றில் நான்கில் ஒரு பகுதி இந்தப் பகுதியில் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிறது என நம்பப்படுவதாலேயே இந்தப்போட்டி நிலவுகின்றது.

இந்நாள் இருக்கும் கட்சிகள் தாமும்
கட்சித் தலைவர் என்று கழறும்
ஆட்கள் தாமும் அறங்கொல் பவரே!
தமிழ கத்தின் தலைவர் என்பர்
தமிழைச் சாக டிக்கப் பின்னிடார்,
தமிழ்க்கொலை பார்க்கத் தாளம் போடுவர்
பொழுது விடிந்து போழுது போனால்
காசு பறிப்பதே கடனாய்க் கொள்வர்!

**- பாவேந்தர் பாரதிதாசன்**

# ‘துக்ளக்’ சோ–வை குறி வைத்த புலிகள்!



**‘ஹிண்டு’** ராம் எனக்கு நெருக்கமானதொரு பத்திரிகையாளர். ஹிண்டு குடும்பத்தின் செல்வாக்கைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்தச் செல்வாக்கையோ, பகட்டையோ ராமிடம் பார்க்க முடியாது.

அவ்வளவு பெரிய பாரம்பரியம் கொண்ட பத்திரிகையை நடத்தி வரும் ராம் ஒரு பொது இடத்தில் தன்னுடைய தவறை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக் கூடியவராகவும் இருந்தார். என்னுடைய அனுபவத்தில் ஒரு உதாரணம்.

விடுதலைப் புலிகள் விசயத்தில் ஆரம்பத்தில் இருந்தே நான் அவர்களைக் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்தேன். அவர்களால் வன்முறைதான் பரவும், ஈழமும் கிடைக்காது, எல்லாத் தலைவர்களையும் ஒழித்துக்கட்டிவிட்டு தன்னை நிலை நிறுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்று தொடர்ந்து நான் எழுதி வந்தேன்.

அப்போது ராம் விடுதலைப் புலிகளை ஆதரித்துக் கொண்டிருந்தார். அதற்குப் பிறகு சிறிது சிறிதாக அவருடைய அபிப்பிராயம் மாற ஆரம்பித்தது. மாறிய பிறகு அவர்களை விமர்சித்தார். கண்டித்து எழுதினார்.

அந்தச் சமயத்தில் ஒரு பொதுக்கூட்டம். அதில் ராமும், நானும் கலந்து கொண்டோம். அதில் அவர் பேசும்போது அன்றைய கூட்டத்திற்குச் சம்பந்தமே இல்லாமல் ஒன்றைச் சொன்னார்.

“இங்கே நிறையப்பேர் இருப்பதால் நான் ஒரு விசயத்தைச் சொல்லியே ஆகணும். புலிகளை முதலிலேயே புரிஞ்சிக்கிட்டவர் சோ ஒருத்தர்தான். இங்கே உள்ள பலர் அதைப் புரிஞ்சுக்கலை. தப்பாகத்தான் எழுதிக்கிட்டிருந்தேன். ஆனா சோ சொன்னதுதான் கடைசியில் ‘ரைட்’ ஆகிப்போச்சு... இதை எல்லோருடைய எதிரிலும் சொல்லணும்னு தோணிச்சு... அதனாலே இங்கே சொல்றேன்.”

இன்னொரு முறை, ஒருநாள் இரவு பதினொரு மணியளவில் எனக்கு போன் பண்ணினார்.

“ஒரு முக்கியமான விசயம். எனக்கு ஒரு ஆதாரபூர்வமான தகவல் வந்திருக்கு. அதனால் நான் உனக்கு போன் பண்றேன். ஜாக்கிரதையாக இரு.”

“என்ன..ராம்..எதுக்கு நான் ஜாக்கிரதையாக இருக்கணும்?”

“இல்லை..உன் உயிருக்கு ஆபத்து வரும். ஜாக்கிரதை” என்றார் ராம்.

அதன்பிறகுதான் எனக்கு சில விசயங்கள் தெரிய வந்தன. போலீசிடமிருந்து இந்தத் தகவல் இவருக்குக் கசிந்திருக்கிறது. அதாவது என்னைத் தாக்க புலிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதுதான் தகவல்.

அந்தத் தகவலை என்னிடம் சொன்னதோடு மறுநாளே ‘ஹிண்டு’வில் வெளியிட்டுவிட்டார். “போலிஸார் அதை மறைக்கிறார்கள், அப்படி மறைத்தால் சோ–வுக்கு அபாயம், அதைப் பிரகடனப்படுத்தினால்தான் சோ–வுக்குப் பாதுகாப்பு” என்று தீர்மானம் பண்ணி அதை அவர் வெளியிட்டுவிட்டார்.

அதன்பிறகுதான் எனக்கு துப்பாக்கி தாங்கிய போலிஸ் பாதுகாப்பு எல்லாம் தரப்பட்டது. இந்த மாதிரி எல்லாம் நடக்கக் காரணமாக இருந்தவர் ராம்தான்.

பத்திரிகையுலகத்தில் ‘ஹிண்டு’வுக்கு ஒரு பெரிய மதிப்பு இருக்கிறது என்றால் அதற்குப் பலர் காரணம் என்றாலும் ராமும் ஒரு காரணம். ‘ஃப்ரண்ட்லைன்’ – பத்திரிகையை அவ்வளவு பிரமாதமாக அவர் நடத்தினார். நடத்துகிறார். அதனுடைய சில முடிவுகளை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அதில் வலியுறுத்துவது இடதுசாரி பார்வையை. நான் வலதுசாரி. இருந்தாலும் அதில் முன்வைக்கப்படும் விசயங்கள் அவ்வளவு ஆழமானதாக, கூடுதல் உழைப்புடன் வெளிவருபவையாக இருக்கும்.

**– இந்தக் கருத்துகளை சோ தான் ‘குமுதம்’ இதழில் வாராவாரம் எழுதி வரும் ‘ஓசாம அசா’ எனும் கட்டுரைத் தொடரில் குறிப்பிட்டிருக்கிறார்.** *

# இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு போவது நியாந்தானா?



கிளிநொச்சியில் உள்ள இரணைமடு குள நீரை யாழ்ப்பாணம் கொண்டு செல்வது சம்பந்தமான வாதப்பிரதிவாதங்கள் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகின்றன. ஒரு சாரார் இரணைமடு குள நீர் கிளிநொச்சிப் பிரதேச விவசாயிகளின் அடிப்படைத் தேவைக்குரிய சொத்து என்பதால் அதை யாழ்ப்பாணம் கொண்டு போவது முறையல்லவென்றும், இன்னொரு சாரார் அதைக் கொண்டே போக வேண்டும் எனவும் கன்னை பிரிந்து நின்று வாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பிரச்சினை இப்பொழுது வழமைபோல அரசியல்வாதிகளின் கைகளிலும் சிக்கி புதிய புதிய வடிவங்களை எடுத்து வருகின்றது. குறிப்பாக கிளிநொச்சிப் பிரதேச மக்களின் வாக்குகளில் கண் வைத்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் போன்றவர்கள் இந்தப் பிரச்சினையில் கிளிநொச்சி மக்களின் பக்கம் நிற்கும் பாதுகாவலர்கள் போல வேசமிட்டு நாடகமாடியும் வருகின்றனர்.

மறுபக்கத்தில் இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டுபோயே தீருவது என்று கங்கணம் கட்டி நிற்பவர்களில் யாழ்.மையவாதத்தை எப்பொழுதும் உயர்த்திப் பிடிக்கும் தமிழ் அரச அதிகார வர்க்கம் முன்னணியில் நிற்கிறது.

இந்த இடத்தில் யாழ்.மையவாத அதிகார வர்க்கத்தின் பழைய சம்பவம் ஒன்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

1965ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி நகருக்கு அருகே திருவையாறு படித்த வாலிபர் திட்டத்தின் முதலாம் படிவத்தில 102 பேருக்கு காணிகள் வழங்கப்பட்டன. இதேகாலகட்டத்தில் விசுவமடு படித்த வாலிபர் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. விசுவமடு படித்த வாலிபர் திட்டம் சிறப்பாகச் செயற்பட, திருவையாறு படித்த வாலிபர் திட்டம் மிகவும் பின்தங்கி நின்றது. அதற்குக் காரணம் விசுமடு படித்த வாலிபர் திட்டத்துக்கு விசுவமடு குளத்திலிருந்து தண்ணீர் வசதி செய்து கொடுத்தது போல, திருவையாறு திட்டத்துக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

அதற்குக் காரணம், திருவையாறு படித்த வாலிபர் திட்ட காணிகளுக்கு முன்புறமாக இரணைமடுவிலிருந்து கிளிநொச்சியின் மேற்குப் பிரதேசங்களான 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் வாய்கால் காணிகளுக்கும், உருத்திரபுரத்திற்கும் பிரதான வாய்க்காலால் தண்ணீர் சென்றாலும், திருவையாறு திட்டத்துக்கு தண்ணீர் கொடுக்க யாழ்.கச்சேரி அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள்.

**திருவையூரான்**

அந்தக் காலகட்டத்தில் திருவையாறு படித்த வாலிபர் திட்டத்தின் குடியேற்ற அதிகாரியாக (Colonisation Officer) செல்லையா சுந்தரமூர்த்தி என்ற கரவெட்டியைச் சேர்ந்த முற்போக்காளர் ஒருவர் இருந்தார். அவர் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு யாழ்.கச்சேரியில் அப்பொழுது உதவி அரசாங்க அதிபராக இருந்த முருகேசம்பிள்ளையை (குமார் பொன்னம்பலத்தின் மனைவியின் தகப்பனார்) திருவையாறுக்கு அழைத்துக் கூட்டம் ஒன்றை நடாத்தினார். அந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய திருவையாறு திட்டத்தின் 102 இளைஞர்களும் தமக்கு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யும்படி வலியுறுத்தினர்.

அந்தக் கூட்டம் ஒரு கட்டத்தில் முருகேசம்பிள்ளைக்கும் திட்ட வாலிப விவசாயிகளுக்கும் இடையிலான காரசாரமான வாக்குவாதமாக மாறிவிட்டது. அதனால் கோபமடைந்த முருகேசம்பிள்ளை திருவையாறு திட்ட விவசாயிகளைப் பார்த்து ''தண்ணி வேணுமெண்டால் முழங்காலிலை கல்லாலை குத்துங்கோ'' என்று ஆபாசமாகத் திட்டினார். அத்துடன் ''இரணைமடுக்குளம் கட்டினது உங்களுக்காக அல்ல. அது சேர்.பொன்.இராமநாதனின் காணிக்கு தண்ணி கொடுக்கவே கட்டினது'' எனவும் அகங்காரத்துடன் கூறினார். (இராமநாதனுக்கு அப்பொழுது திருவையாறுக்கு அருகே 2ஆம் வாய்க்கால் பகுதியில் ஆயிரம் ஏக்கர் விவசாயப் பண்ணை ஒன்று இருந்தது. அவரது பண்ணையில் வேலை செய்த கூலியாட்கள் தினமும் சென்றுவரவே அந்தக் காலத்தில் காங்கேசன்துறையிலிருந்து பரந்தன் வரை ஒரு புகையிரதம் இயக்கப்பட்டதாகவும் கூறப்படுவதுண்டு)

இவ்வாறு இரணைமடு குளம் கிளிநொச்சியின் சாதாரண விவசாயிகளுக்கு உரியதல்ல என்ற கருத்து அன்றே யாழ்.மேட்டுக்குடி மையவாதிகளிடம் வேரூன்றி இருந்து வந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, இவ்வளவு காலமும் இல்லாமல் இப்பொழுது திடீரென்று இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு போக வேண்டும் என்ற கருத்து உருவாகக் காரணம் என்ன? யாழ்ப்பாணத்தின் சனத்தொகை பல இலட்சங்களால் அதிகரித்துவிட்டதா? இல்லையே. இன்னும் சொல்லப்போனால் யுத்தம் காரணமாக வடக்கைச் சேர்ந்த பல இலட்சம் மக்கள் அந்நிய நாடுகளுக்கும் தென்னிலங்கைக்கும் இடம்பெயர்ந்து சென்ற பின்னர் சனத்தொகை குறைந்தல்லவா இருக்கின்றது?

அல்லது யாழ்ப்பாணக் கிணறுகளின் நீரூற்றுகள் எல்லாம் தமது ஊற்றைத் திடீரென்று நிறுத்திவிட்டனவா? அப்படியும் தெரியவில்லை. பின்னர் ஏன் இரணைமடு நீருக்காக திடீரென இந்த ஆர்ப்பாட்டமும் ஆவேசமும்?

சுமார் 50 வருடங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணத்துக்கு வந்த இஸ்ரேலிய நிபுணர்கள் சிலர் இன்னும் 30 வருடங்களில் யாழ்ப்பாணத்தின் தரையடி நீர் உவர் நீராக மாறி யாழ்ப்பாணம் பாலைவனமாக மாறிவிடும் என்று சொல்லிச் சென்றதாக முன்பு பலகாலம் ஒரு கதை இருந்து வந்தது.

அந்தக் காலகட்டத்தில் சாவகச்சேரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும், (அப்பொழுது கிளிநொச்சித் தொகுதி உருவாகவில்லை. அதுவும் சாவகச்சேரித் தொகுதிக்குள்ளேயே உள்ளடங்கி இருந்தது) ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் உதவி விவசாய அமைச்சராகவும் தமிழ் காங்கிரசைச் சேர்ந்த வி.குமாரசாமி இருந்தார். அவர் மாவலி கங்கையை வடக்கே திருப்ப வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தி வந்தார். 1956 பொதுத்தேர்தலின் போது பருத்தித்துறைத் தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வெற்றியீட்டி நாடாளுமன்றம் சென்ற தோழர் பொன்.கந்தையா அவர்களும் மாவலி கங்கையை வடக்கே திருப்ப வேண்டும் என நாடாளுமன்றத்தில் வலியுறுத்தி வந்தார்.

பின்னர் மகாவலி கங்கையை வடக்கே கொண்டுவந்தால், அதை ஆனையிறவு வரை செல்கின்ற யாழ்ப்பாணக் கடலேரியில் விழுத்தி, பின்னர் ஒரு வாய்க்காலின் மூலம் வடமராட்சி கிழக்கு வரை செல்கின்ற தொண்டமானாறு கடலேரிக்குக் கொண்டு சென்று, பின்னர் தொண்டமானாறு வரை கொண்டு செல்வது எனத் திட்டம் வகுக்கப்பட்டது. அதற்காக பெரும் பணச்செலவில் ஆனையிறவில் உள்ள யாழ்ப்பாணக் கடலேரியில் இருந்து, மண்டலாய் வரையுள்ள தொண்டமானாறு கடலேரி வரை ஒரு ஆழ அகலமான கால்வாயும் வெட்டப்பட்டது. அத்துடன் தொண்டமானாறு கடலேரியில் உள்ள உப்பு நீரை காற்றாடி நீரிறைக்கும் யந்திரத்தின் மூலம் வெளியேற்றுவதற்காக தொண்டமானாறுக்கு அருகே இடைக்காட்டுக் கிராம எல்லைக்குள் மிகப்பெரிய காற்றாடி ஒன்று பொருத்தப்பட்டதுடன், கடல் நீர் திரும்பவும் தொண்டமானாறு கடலேரிக்குள் வராமல் தடுப்பதற்காக தொண்டமானாறிலிருந்து காங்கேசன்துறை செல்லும் மாவெள்ளைக்கடவன் சந்தியிலிருந்து கிழக்கே செல்வச்சந்நிதி கோவில்வரை சீமெந்து மதகு அணை ஒன்றும் கட்டப்பட்டது.

ஆனால் தமிழ் காங்கிரஸ் அமைச்சர் குமாரசாமியினதும், கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.கந்தையாவினதும் இந்த முயற்சிக்கு தமிழரசுக் கட்சியினர் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கவில்லை. அதற்குப் பதிலாக குமாரசாமியைக் கிண்டல் பண்ணும் விதமாக தமிழரசுக் கட்சியின் அ.அமிர்தலிங்கம் போன்றவர்கள்,

''குமாரசாமி மாவலித் தண்ணீரை யாழ்ப்பாணம் கொண்டு வரப்போகிறாராம். அவர் அதை சொம்பிலேதான் கொண்டுவர முடியும்'' எனக் கூட்டங்களில் பேசி வந்தனர். அன்று தமிழ் காங்கிரசுடனும் இடதுசாரிகளுடனும் சேர்ந்து நின்று தமிழரசுக் கட்சியும் குரலெழுப்பி இருந்தால், எப்பொழுதோ மாவலி நீர் வடக்கே வந்து யாழ்ப்பாணத்தின் தரையடி நீர் மட்டமும் அதிகரித்திருக்கும். இரணைமடு நீர்க்கதையும் எழுந்திருக்காது. அப்படி நடக்காததால், அரசியல் மாற்றங்களால் அந்தத் திட்டமும் கைவிடப்பட்டுவிட்டது. (அதன்பின்னர்தான் மாவலி நீர் வட மத்திய மாகாணத்துக்கும் கிழக்கிற்கும் வெற்றிகரமாகக் கொண்டு செல்லப்பட்டது)

பின்னர் 1965இல் டட்லி சேனநாயக்க தலைமையில் ஐ.தே.க அரசாங்கம் அமைந்து அதில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் இணைந்து இருந்ததால், மீண்டும் மாவலி கங்கையை வடக்கே திருப்பும் கதை எழுந்தது. அதனால் அந்த நதி வடக்கே வரும் பாதை எனக் கருதப்பட்ட நெடுங்கேணிக்கு வடக்கே இருந்த வளமான காட்டுக் காணிகள் யாவும் ஆர்.வி.ஜி பீடிக்கம்பனி, கல்கி பீடிக்கம்பனி, யானை பீடிக்கம்பனி, டொலர் கொம்பனி போன்ற பெரும் கம்பனிகளாலும், ஜீ.ஜீ.பொன்னம்பலம் உட்பட பல தமிழ் அரசியல்வாதிகளாலும் முன்கூட்டியே பங்கு போடப்பட்டன. (அவற்றில் சிலதான் பின்னர் கென்ற் பாம், டொலர் பாம் என வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டன) ஆனால் அந்த முயற்சி வெறும் கண்துடைப்பு என்பது கொஞ்ச நாளிலேயே தெரிய வந்தது.

இந்தச் சூழ்நிலையில் இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதை எதிர்ப்பவர்கள் யாரும் அதை வீம்புக்கு எதிர்க்கவில்லை. அதுமாத்திரமின்றி, யாழ்ப்பாணத்தவர்கள் இரணைமடு குளத்து நீரைக் குடிப்பதற்கு முன்வந்ததே ஒரு மாபெரும் பிரளயம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் 1950களில் அரசாங்கம் கிளிநொச்சிப் பகுதியில் உருவாக்கிய குடியேற்றத்திட்டங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று குடியேறியவர்கள் பெரும்பாலும் வறுமைப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், செழிப்பான நிலமோ தண்ணீரோ அற்ற தீவுப்பகுதி மக்களும் தான். அவர்களை தம்மைவிடத் தாழ்ந்தவர்களாகப் பார்த்த ஒரு மனப்பான்மை யாழ்.மேட்டுக்குடியினரிடம் இருந்ததை எவரும் மறுத்துவிட முடியாது.

''ஆனையிறவு கடந்தால் சாதி சமயம் இல்லை'' என்று சொன்னவர்களும், பிளாஸ்ரிக் போத்தல்களில் தண்ணீர் விற்பனைக்கு வராத காலத்திலேயே வன்னித் தண்ணீரைக் குடிக்கக்கூடாது எனக் கருதி யாழ்தேவி புகையிரதத்தில் கண்ணாடிப் போத்தல்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து தண்ணீர் கொண்டு சென்று உத்தியோகம் பார்த்துவிட்டு வந்தவர்களும், இன்று இரணைமடுத் தண்ணீரைக் குடிப்பதற்கு முண்டியடிப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், கிளிநொச்சிப் பிரதேச மக்களுக்கு இரணைமடு குளத் தண்ணீர்தான் அவர்களது ஜீவபனோபாயத்தின் ஒரேயொரு ஊற்றுமூலம். அந்தத் தண்ணீரை நம்பித்தான் அவர்களது பிரதான தொழிலான விவசாயம் நடைபெறுகின்றது. தற்பொழுது குளத்தில் உள்ள தண்ணீரே அவர்களது விவசாயத்துக்குப் பற்றாக்குறையாகத்தான் இருக்கின்றது. அவர்கள் தண்ணீருக்காக கடந்த காலங்களில் நடாத்திய போராட்டங்களைப் பற்றி இன்றைய சந்ததியினர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

1960களில் அங்கு தண்ணீர் பங்கீட்டுக்கென

ஒரு முறை இருந்தது. குறிப்பாக சிறுபோக வேளாண்மையின் போது யாழ்.கச்சேரி அதிகாரிகள் கிளிநொச்சிக்கு வந்து 'தண்ணீர் கூட்டம்' என்றொரு கூட்டம் நடாத்துவார்கள். அந்த நேரத்தில் குளத்தில் உள்ள நீரின் அளவை வைத்து விவசாயிகளுக்கு எவ்வளவு தண்ணீர் வழங்குவது என்று தீர்மானிப்பார்கள். பெரும்பாலும் விவசாயிகளிடம் உள்ள வயல்காணியில் மூன்றில் ஒரு பங்கு காணிக்குத் தண்ணீர் வழங்குவது எனத் தீர்மானிக்கப்படும். அதன்படி அவர்களுக்கு குடியேற்றத் திட்டத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மூன்று ஏக்கர் காணியில் ஒரு ஏக்கருக்குத் தண்ணீர் வழங்கப்படும். குளத்தில் போதிய தண்ணீர் இல்லையென்றால் அது அரை ஏக்கராகவும் கூடக் குறைக்கப்படுவதுண்டு.

இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால், மூன்று ஏக்கர் வைத்திருக்கும் குடியேற்றத்திட்ட விவசாயிக்கு மூன்றிலொன்றின்படி ஒரு ஏக்கர் என்றால், 300 ஏக்கர் வைத்திருக்கும் பெரும் காணிச் சொந்தக்காரருக்கு 100 ஏக்கருக்குத் தண்ணீர் வழங்கப்படும். குடியேற்ற விவசாயிக்கு அவனுடைய வயல்தான் ஒரேயோரு வருமானம். ஆனால் இந்தப் பெரும் காணிச் சொந்தக்காரருக்கு கிளிநொச்சியில் வர்த்தக நிலையங்கள், வட்டிக்கடைகள், மில்கள், தியேட்டர்கள் என்பன போன்ற வேறு வருமான வழிகளும் இருக்கும். சிலர் யாழ்ப்பாணத்தில் கொழுத்த சம்பளம் வாங்கும் அரச உயர் அதிகாரிகளாக இருப்பர்.

எனவே இந்த கபடத்தனமான விகிதாசார முறையை மாற்றி, ஒரு ஏக்கர் என்றால் குடியேற்ற விவசாயி – பெரும் காணிக்காரர் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் ஒரு ஏக்கருக்கே தண்ணீர் வழங்கும்படி விவசாயிகள் கோரி வந்தனர். ஆனால் யாழ்.கச்சேரி அதிகாரிகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அந்த நேரத்தில் புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் கிளிநொச்சிப் பிரதேசத்தில் தனது கிளைகளை அமைத்து வேலை



செய்ய ஆரம்பித்திருந்தது. அது இந்தப் பிரச்சினைக்காக கிளிநொச்சிப் பிரதேச விவசாயிகளை அணிதிரட்டிப் போராட்டங்களை முன்னெடுத்தது.

60களின் பிற்பகுதியில் நடந்த சிறுபோகத் தண்ணீர் கூட்டம் ஒன்றுக்கு யாழ்.கச்சேரியிலிருந்து மேலதிக அரசாங்க அதிபர் சபாரத்தினம் வந்திருந்தார். அந்தக் கூட்டத்துக்கு அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளிநொச்சி கிளை பல நூற்றுக்கணக்கான விவசாயிகளை அணிதிரட்டிச் சென்று தண்ணீர் பங்கிடும் முறையை மாற்றி எல்லோருக்கும் ஒரே அளவான தண்ணீரை வழங்குமாறு கோரிக்கை விடுத்தது. ஆனால் மேலதிக அரசாங்க அதிபர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். அதற்கு இன்னொரு காரணம் அவருக்கு, உதவி அரசாங்க அதிபர் முருகேசம்பிள்ளைக்கு, முன்னாள் அரசாங்க அதிபர் ஸ்ரீகாந்தாவுக்கு என, தமிழ் அரச உயரதிகாரிகள் பலருக்கு பல நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் கிளிநொச்சியில் இருந்தது.

விவசாயிகள் தமது கோரிக்கையில் உறுதியாக இருந்தனர். அதற்குக் காரணம் அவர்களை விவசாயிகள் சங்கம் ஸ்தாபனரீதியாக அணிதிரட்டி அவர்களது பலத்தை ஒன்று திரட்டியிருந்ததுதான். தமது கோரிக்கை நிறைவேறும்வரை மேலதிக அரசாங்க அதிபரை வெளியேற விடமாட்டோம் என விவசாயிகள் அவரைச் சுற்றிவளைத்து முற்றுகைப் (கேரோ) போராட்டம் நடாத்தினர். அதன்பின்னர் மேலதிக அரசாங்க அதிபர் வேறு வழியில்லாமல் விவசாயிகளின் கோரிக்கைக்கு உடன்பட்டு கையெழுத்து வைக்க வேண்டி வந்தது. அந்தச் சம்பவத்தின் பின்னர் கிளிநொச்சியில் தண்ணீர் கூட்டம் நடாத்துவதாக இருந்தால் பொலிஸ் பாதுகாப்புடன்தான் நடாத்துவது வழமை.

இதிலிருந்தே கிளிநொச்சி விவசாயிகளுக்கு உள்ள தண்ணீர் பிரச்சினையை ஒருவர் புரிந்துகொள்ள முடியும். விவசாயிகள் சங்கம் இந்த நீர்ப்பற்றாக்குறையைச் சமாளிக்க இன்னொரு ஆலோசனையையும் முன்வைத்தது. அதாவது இரணைமடு அணைக்கட்டை உயர்த்தி நீர்க் கொள்வனவை அதிகரிக்கச் சொல்லிக் கோரியது. அப்படி உயர்த்தினால் மாங்குளம், ஒட்டிசுட்டான் போன்ற பகுதிகள் நீரில் மூழ்கிவிடும் என்றொரு காரணத்தைச் சொல்லி நீர்ப்பாசன இலாகா உயரதிகாரிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

ஆனால் 1970 – 77 காலகட்டத்தில் கிளிநொச்சித் தொகுதியின் சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சர் செல்லையா குமாரசூரியர் அணைக்கட்டை உயர்த்தும்படி அப்பொழுது கிளிநொச்சியில் நீர்ப்பாசனப் பொறியியலாளராக இருந்த ஆறுமுகம் என்பவருக்கு கடுமையான உத்தரவிட்டதால், கட்டு சிறியளவு உயர்த்தப்பட்டது. (அப்படி உயர்த்தியதால் மாங்குளமோ ஒட்டிசுட்டானோ நீரில் மூழ்கிப் போய்விடவில்லை)

இந்த இடத்தில் இன்னொரு முக்கியமான விடயத்தையும் தெரியப்படுத்துவது அவசியம். இரணைமடுக் குளத்தைக் கட்டியபோது யாழ்.மேட்டுக்குடியினருக்கு வசதியான முறையிலேயே அது திட்டமிட்டுக் கட்டப்பட்டது. அதாவது இரணைமடுக் குளத்திலிருந்து தண்ணீர் வெளியேறுவதற்கு இரண்டு துருசுகள் (மதகுகள்) உண்டு. ஒன்று வலதுகரைத் துருசு. மற்றது இடதுகரைத் துருசு. வலது கரைத் துருசால் வட்டக்கச்சி, இராமநாதபுரம் போன்ற சாதாரண குடியேற்றத்திட்ட விவசாயிகளுக்குத் தண்ணீர் செல்லும். இடதுகரைத் துருசால் சேர்.பொன். இராமநாதனின் ஆயிரம் ஏக்கர் பண்ணை உட்பட பெரும் காணிச் சொந்தக் காரர்களின் 2,3,4,5,6,7 ஆம் வாய்க்கால் கமங்களுக்கும், இறுதியாக உருத்திரபுரம் குடியேற்ற விவசாயிகளுக்கும் தண்ணீர் செல்லும்.

தண்ணீர் குறைவான காலங்களில் சாதாரண விவசாயிகளுக்குத் தண்ணீர் செல்லும் வலதுகரைத் துருசைப் பூட்டி விடுவார்கள். அதனால் அவர்களது பயிர்கள் வாடிக்கருகிச் சாகும். ஆனால் பெரும் காணிச் சொந்தக் காரர்களுக்குத் தண்ணீர் செல்லும் இடதுகரைத் துருசால் தண்ணீர் தொடர்ந்து பாய்ந்து கொண்டிருக்கும். அதற்குக் காரணம் வலதுகரை விவசாயிகளுக்குத் தண்ணீர் நிறுத்தப்பட்ட பின்னரும், இடதுகரை பெரும் காணிகளுக்குத் தண்ணீர் பாயும் வகையில் அந்தத் துருசை 5

அடி தாழ்த்திக் கட்டி வைத்திருப்பதுதான்! இது எவ்வளவு திட்டமிட்ட ஓரவஞ்சகம் பாருங்கள். இதைச் சிங்களவர்கள் செய்யவில்லை. தமிழர்களுக்குத் தனிநாடு கோரும் இன்றைய தமிழீழத் தேசியவாதிகளின் முன்னைய பரம்பரையினர் செய்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அதையும் மாற்றி அமைக்கும்படி விவசாயிகள் சங்கம் கோரியதாயினும் நீர்ப்பாசன இலாகா மறுத்துவிட்டது.

இந்த நிலைமையில் கிளிநொச்சி விவசாயிகளின் வயிற்றில் அடித்துவிட்டு இரணைமடு நீரை யாழ்ப்பாணத்தவர்களுக்குக் குடிநீருக்காகக் கொண்டு போவது நியாந்தானா என்பதை நீதி நியாயம் உள்ள ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்ப்பது அவசியம். யாழ்ப்பாணத்தவர்களுக்கு குடிநீர்ப் பிரச்சினையிருந்தால் அதைத் தீர்த்து வைக்க வேண்டியது மத்திய அரசாங்கத்தினதும், மாகாண அரசாங்கத்தினதும் தலையாய கடமை என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதற்காக இன்னொரு பகுதியிலுள்ள வறுமைப்பட்டவர்களுக்குரிய நீரைக் 'கொள்ளையிடுவதை' எந்தவிதத்திலும் ஏற்க முடியாது.

அப்படி இரணைமடு நீர்தான் யாழ்ப்பாணத்தவர்களுக்கு வேண்டும் என்றால், முதலில் மாவலி கங்கையையோ அல்லது வேறு ஏதாவது ஒரு நதியையோ இரணைமடுக் குளத்துக்குத் திருப்பி அதன் தண்ணீரால் குளத்தை நிரப்பிக்கொண்டு பின்னர் யாழ்ப்பாணத்தவர்களின் தேவையைத் தீர்த்து வைக்கலாம். அதுதான் சரியான முறை. மாவலி நீரை வடக்கே கொண்டு வரும்படி கோருவதற்கான காலம் காலாவதியாகிவிடவில்லை. அதற்கான காலம் இன்னமும் இருக்கிறது. மதவாச்சி வரை கொண்டுவரப்பட்ட மாவலி நீரை வடக்கே கொண்டு வருவது அப்படியொன்றும் சிரமமான விடயமுமல்ல. அப்படி மாவலி நீர் வடக்கே வருமாக இருந்தால், அது வடக்கு – தெற்கு நட்புறவின் அடையாளமாகவும் இருக்கும்.

இது ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரின் அளவை உயர்த்துவதற்கான வழிவகைகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அங்குள்ள நூற்றுக்கணக்கான குளங்களையும் தூர் வாரி மழை காலங்களில் பெருமளவுக்கு நீரைத் தேக்கி வைப்பதற்கு ஆவன செய்தால் இரணைமடு தண்ணீருக்காக ஏங்க வேண்டிய அவசியமில்லை. அதைவிடுத்து 'உறியிலை நெய் இருக்க ஊரெல்லாம் அலைவதில்' அர்த்தமில்லை.

இந்த இடத்தில் சில தமிழ் ஆய்வாளர்களிடம் எழுந்துள்ள சில கேள்விகளையும், அதற்கு அவர்கள் சொல்லும் விளக்கங்களையும் சொல்லி இக்கட்டுரையை முடிப்பது சிறப்பாக இருக்கும்.

அவர்களது கேள்வி என்னவெனில், யாழ்ப்பாணத்தில் சனத்தொகையும் குறைந்து, திடீர் இயற்கை அனர்த்தங்கள் எதுவும் ஏற்பட்டு கிணறுகளும் வற்றிப்போகாத நிலையில், இப்பொழுது இரணைமடுத் தண்ணீருக்காக முயற்சிப்பது எதற்காக என்பதாகும்.

அந்தக் கேள்விக்கு இப்படியும் ஒரு பதில் சிலரிடம் இருக்கிறது. அதாவது யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஒவ்வொரு குடும்பத்திலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் அனுப்பும் பணம் யாழ்ப்பாணத்தில் பெருமளவு ஒரு நுகர்வுக் கலாச்சாரத்தை வளர்த்து விட்டுள்ளது. பல புதிய வீடுகளும் வர்த்தக ஸ்தாபனங்களும் உருவாகியுள்ளன. அநேகமாக இப்பொழுது ஒவ்வொரு வீட்டிலும் தண்ணீர்த்தாங்கிகள் உள்ளன. சிலர் வீடுகளில் நீச்சல் தடாகங்களும் அமைத்துள்ளனர். பூங்காக்களும் அமைத்துள்ளனர். இதுதவிர ஏராளமான நவீன உணவு விடுதிகள், உல்லாசப்பயண விடுதிகளும் உருவாகி வருகின்றன. இவற்றின் காரணமாக யாழ்ப்பாணத்தின் சனத்தொகை குறைவு என்றாலும் தண்ணீரின் நுகர்வு அதிகரித்துள்ளது. எனவேதான் அவர்களுக்குக் குடிதண்ணீருக்காக வழமையான அவர்களது கிணறுகள் இருந்தாலும், புதிதாக உருவாகியுள்ள மேலதிக தேவைகளுக்காக நீர் தேவைப்படுகிறது.

அப்படி இரணைமடு நீர் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டால், பெரும்பாலான வீடுகளில் இரண்டு நீர்க்குழாய்கள் இருக்க வாய்ப்புண்டு. ஒன்று வழமையான அவர்களது கிணற்றுக் குடிநீரைப் பெறுவதற்கு. மற்றது வன்னியாரின் இரணைமடுக் குள நீரைப் பிற தேவைகளுக்காகப் பெறுவதற்கு. ஏற்கெனவே தீண்டாமையை நிலைநாட்டுவதற்காக தேநீர்க்கடைகளில் 'வெளிப்பேணி – உள்பேணி' எனத் தண்ணீரைப் பிரித்த யாழ்பாணத்தான், இந்தத் தண்ணீரைப் பிரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. *

# சிரியாவில் 3 ஆண்டுகளில் கொல்லப்பட்டவர்கள் தொகை ஒரு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரம் பேர்!

**சி**ரியாவில் ஜனாதிபதி பஸார் ஆஸாத்தின் (Bashar Assad) அரசுக்கு எதிராக 2011 மார்ச்சில் மேற்கத்தைய ஆதரவு பெற்ற கிளர்ச்சிக்காரர்கள் போரை ஆரம்பித்த பின்னர், இதுவரையான 3 ஆண்டுகளில் 1,62,402 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தொகையில் பெரும்பாலானார்கள் சாதாரண அப்பாவிப் பொதுமக்கள். ஏனையோர் பஸாரின் படைவீரர்கள், கிளர்ச்சிக்காரர்கள் ஆவர்.

கொல்லப்பட்டவர்களில் 8,607 குழந்தைகளும், 5,586 பெண்களும் உள்ளடங்குவர் என அந்தத் தகவல் மேலும் கூறுகிறது. பாருங்கள், பெண்களைவிடக் குழந்தைகள் கூடுதலாக இருக்கின்றனர்!

அத்துடன் இந்த உள்நாட்டு யுத்தத்தால் 6.5 மில்லியன் (65 இலட்சம்) மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்! இதுதவிர 2.7 மில்லியன் (27 இலட்சம்) மக்கள் நாட்டைவிட்டே வெளியேறி அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அந்த நாடுகளில் அகதி முகாம்களில் வாழும் இந்த மக்களுக்கு போதிய உணவு, தண்ணீர், சிறுவர்களுக்கான பால்மா, கழிப்பறை வசதி, மருத்துவ வசதி, கல்வி – கலாச்சார வசதிகள் என்பன இல்லாமல் அவர்கள் பெரிதும் அல்லலுறுகின்றனர்.

ஜனாதிபதி ஆஸாத்தின் 30 வருட சர்வாதிகார ஆட்சிக்கு முடிவுகட்டுவதற்காகப் போராடுவதாக கிளர்ச்சிக்காரர்கள் சொல்லிக்கொண்டாலும், அவர்களுக்குப் பின்னால் ஈராக்கில் லிபியாவில் செய்தது போல

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

13ம் பக்கத்தொடர்ச்சி...

மேற்கத்தைய நாடுகள் இருப்பது இரகசியமானதல்ல.

ஆனால் இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், ஆஸாத்துக்கு எதிராகப் போராடுபவர்களில் எதிரும் புதிருமாக மேற்கத்தையப் பாணியில் ஜனநாயகம் பேசுபவர்களும், மேற்கத்தைய நாடுகளால் தொடர்ந்து வேட்டையாடப்பட்டு வரும் அல்கைடா இயக்கத்தினரும் ஒன்றாகக் கைகோத்து இருப்பதுதான். அதாவது 'எதிரிக்கு எதிரி நண்பன் என்பது போல'. இருந்தாலும் கிளர்ச்சிக்காரர்கள் தமக்குள்ளேயே மோதிக்கொள்ளும் சம்பவங்கள் அண்மைய காலங்களில் அதிகரித்து வருகின்றன.

இதுதவிர, ஆஸாத்துக்கும் அவரை எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் இடையே தீவிரமான மத முரண்பாடும் இருக்கின்றது. ஆஸாத் அலவிற் (Alawite) என்ற முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர். கிளர்ச்சிக்காரர்கள் சுன்னி (Sunni) என்ற முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்த முரண்பாடு பல அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்றது. அந்த முரண்பாட்டையே மேற்கத்தைய சக்திகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றன. மேற்கு நாடுகள் ஒருபக்கத்தில் பொதுவான 'இஸ்லாமிய பயங்கரவாதம்' பற்றிப் பேசிக்கொண்டு, மறுபக்கத்தில் அவர்களைப் பிரித்தாளவும் முயல்கின்றன.

ஆனால் ஈராக்கிலும், லிபியாவிலும் செய்தது போன்று மேற்கு நாடுகள் இதுவரை சிரியாவில் நேரடித் தலையீடு எதையும் செய்யவில்லை. அதற்குக் காரணம் ரஸ்யாவின் பலமான ஆதரவு ஆஸாத்தின் அரசுக்கு இருப்பதுதான். இன்னொரு பக்கத்தில் ஈரானும் சிரியாவுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது. ஈரானுடனும் ரஸ்யாவுடனும் மேற்கு நாடுகளுக்கு அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலைக்கு அவைகள் சிரிய அரசுக்கு வழங்கிவரும் ஆதரவும் ஒரு காரணம் என்பது சில அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது.

**- அஹமத்**

முன்பக்கத்தொடர்ச்சி...

முதலாவது அரசியல் கட்சியான ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் துணை நின்றது.

அதன் பின்னர் 1956இல் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவினது அரசு, பிரித்தானியரின் அரைக்காலனித்துவப் பிடியிலிருந்து இலங்கையை விடுவிக்க பல ஏகாதிபத்திய விரோத, முற்போக்கு நடவடிக்கைகளை எடுத்ததாயினும், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அவராலும் முடியாமல் போய்விட்டது. அதுமாத்திரமின்றி ஐ.தே.க கிளப்பிய தனிச்சிங்களக் கோசத்துக்குப் போட்டியாக அவரது அரசு கொண்டு வந்த தனிச்சிங்களம் மட்டும் சட்டம் நிலைமையை மேலும் மோசமாக்கியது.

ஆனால் ஒரு கட்டத்தில் நிலைமையை உணர்ந்து கொண்ட பண்டாரநாயக்க, தமிழரசுக் கட்சித் தலைவர்களை அழைத்து பேச்சுவாத்தை நடாத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்கும் பிராந்திய சபைகளை உருவாக்கும் பொருட்டு 'பண்டா – செல்வா ஒப்பந்தம்' என்னும் உடன்படிக்கையைச் செய்தார். ஆனால் அதை நடைமுறைப்படுத்த விடாமல் ஐ.தே.க பௌத்த குருமாரைக் கொண்டு குழப்பங்களை உருவாக்கி அதைக் கிழித்தெறிய வைத்தது. மறுபக்கத்தில் தமிழரசுக் கட்சியும் தனது அரசியல் இருப்புக்காக அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாமல் பார்த்துக் கொண்டது.

இந்த நிலைமைகளின் பின்னணியில் 1958இல் சுதந்திர இலங்கையின் முதலாவது இனவன்செயலை இனவாதிகள் அரங்கேற்றி வைத்தனர். அதன் பின்னர் 1977, 1981, 1983 என தொடர்ச்சியாக காலத்துக்காலம் இனவன்செயல்கள் இனவாத சக்திகளால் அரங்கேற்றப்பட்டு வந்துள்ளன. இந்த இன வன்செயல்கள் எல்லாவற்றுக்கும் ஐ.தே.கவே பின்னணியில் இருந்து செயற்பட்டு வந்துள்ளது.

1957இல் செய்து கொள்ளப்பட்ட பண்டா – செல்வா உடன்படிக்கை தோல்விகண்ட பின்னர், 1965இல் தனது அரசாங்கத்தில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்த்துக் கொள்வதற்காக மாவட்ட சபைகளை உருவாக்குவதாக ஐ.தே.க ஒரு போலி வாக்குறுதியைக் கொடுத்தது. ஆனால் அதைக்கூட நடைமுறைப்படுத்தாமல் ஐ.தே.க அரசு ஏமாற்றிவிட்டது.

பின்னர் 1977இல் அமோக வெற்றியுடன் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க அரசு மாவட்ட அபிவிருத்திச் சபைகளை உருவாக்கப் போவதாக அறிவித்து அதற்குத் தேர்தல்களையும் நடாத்தியது. ஆனால் யாழ்.மாவட்ட சபைத் தேர்தலின் போது ஐ.தே.க தெற்கிலிருந்து குண்டர்களைக் கொண்டு சென்று அந்தத் தேர்தலைக் கேலிக்கூத்தாக்கியதுடன், யாழ்.பொதுநூலகம், ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம், யாழ்.எம்.பி யோகேஸ்வரனின் வீடு, யாழ்.நகரக் கடைகள் என்பனவற்றை எரித்து யாழ்ப்பாணத்தைச் சுடுகாடாக்கியது.

அதுமாத்திரமின்றி, ஜே.ஆரின் அரசு அதன்பின்னர் தமிழ் மக்களின் மேல் இராணுவ ஒடுக்குமுறையையும் கட்டவிழ்த்துவிட்டது. இந்தப் பின்னணியிலேயே தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகியது.

ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்து அதை ஒடுக்க ஜே.ஆரின் அரசு அமெரிக்காவின் உதவியை நாடிச்சென்ற சூழலிலேயே இந்தியா தலையிட்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசியல் சாசனத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை உருவாக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபைகள் அமைக்கும் திட்டத்திற்கு வழிவகுத்தது. அதன் அடிப்படையில் 9 மாகாணங்களிலும் மாகாணசபைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

அதிலும் கூட பிரேமதாசவின் ஐ.தே.க அரசு ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைத்ததுடன்,

இந்திய – இலங்கை உடன்படிக்கையையும் முடக்கி வைத்தது. அதன்பின்னர் நீதிமன்றத்தின் மூலம் ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபை இரண்டாகப் பிரிக்கப்பட்டும் விட்டது.

எது எப்படியிருந்த போதும் நீண்டகாலமாக செயற்படாமல் இருந்த வடக்கு மாகாணசபைக்கும் தேர்தல் நடாத்தப்பட்டு அதுவும் செயற்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. அதாவது தற்போது 9 மாகாணசபைகளும் செயற்படும் நிலையில் உள்ளன.

ஆனால் தற்போது பிரச்சினை என்னவெனில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வாக அமைக்கப்பட்ட மாகாணசபைகளின் செயற்பாடுகளில் – குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணசபைகளின் செயற்பாடுகளில் – ஏற்பட்டுள்ள செயலற்ற நிலைமைதான். குறிப்பாக கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற வட மாகாணசபைத் தேர்தலின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதன் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் அதன் நிர்வாகம் நடந்து கொள்ளும் முறைதான். அந்தச் சபையை நிர்வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மாகாண சபை நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தும் திறனற்றவர்களாக வேறு பிரச்சினைகளில் அக்கறை செலத்தி வருகின்றனர். இதன் மூலம் மக்களின் எதிர்பார்ப்பைச் சிதறடித்துள்ளனர்.

மறுபக்கத்தில் அரசாங்கம் மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை வழங்குவதில் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்களை முறையாக வழங்கினாலே தமிழ் பேசும் மக்களின் கணிசமான பிரச்சினைகள் தீர்வதுடன், முழு இலங்கை மக்களுக்கும் பிராந்திய ரீதியிலான அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்படும் என்பதை கணக்கில் எடுக்கத் தவறிய அரசாங்கம், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற ஒற்றை வழிப் பாதையையே மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. அரசாங்கத்தின் இந்தப் போக்கு இனப்பிரச்சினையைத் தீரவிடாமல் செய்து, அதை வைத்தே தமது அரசியல் பிழைப்பைக் காலம் காலமாக நடாத்தி வருகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு நல்லதொரு வரப்பிரசாதமாக அமைந்து இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கென காலத்துக்காலம் முன்வைக்கப்பட்ட பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், ஜே.ஆரின் மாவட்ட அபிவிருத்திச் சபைகள், சந்திரிகாவின் தீர்வுப்பொதி என எல்லாமே தமிழ் – சிங்கள இனவாத சக்திகளின் கைங்கரியங்களால் தோல்விகண்ட நிலையில், இந்திய – இலங்கை ஒப்பந்தம் மட்டுமே 27 வருடங்களாக நின்று பிடித்து வருகின்றது. அதற்குக் காரணம் அந்த ஒப்பந்தம் வலிமைமிக்க இந்திய அரசின் முயற்சியால் உருவாக்கப்பட்டதால் ஆகும்.

அதுமாத்திரமின்றி தமிழ் மக்களின் பெரும்பாலான பிரச்சினைகளின் தீர்வுக்கும் 13ஆவது திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. எனவே அதை முழுமையாக அமுல்படுத்தச் சொல்லிக் கோருவதே தமிழ் மக்களுக்கு இன்றைய நிலையில் மிகவும் பயனுள்ள செயற்பாடாகும். "பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் நம்பிக்கை இல்லை, அதற்கு வரமாட்டோம்" எனக் கூறும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும்படி கூட அரசைக் கோராமல் இருந்து வருவதுடன், புலம்பெயர் புலிச் சக்திகளினதும், மேற்கு நாடுகளினதும் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளுடன் கைகோத்துச் செயற்படுவது அவர்களுக்கு இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை இல்லை என்பதையும், அவர்களது கபட நோக்கத்தையுமே எடுத்துக் காட்டுகிறது.

எனவே தனித்தமிழீழம், பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற எதிரும் புதிருமான துருவ நிலைப்பட்ட இழுபறிகளுக்கு மாற்றாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்யக்கோரி மக்கள் இயக்கத்தை உருவாக்குவதே இன்றைய சூழலில் அவசியத் தேவையாகும். அப்படியான ஒரு கோரிக்கையை இந்தியாவில் அதிகாரத்துக்கு வரும் எந்தவொரு அரசும் கூட ஆதரிக்கக் கூடிய சூழல் உள்ளது.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி பலதரப்பட்ட மக்கள் இயக்கங்களை முன்னெடுப்பதே தமிழ் ஜனநாயக சக்திகளின் முன்னால் உள்ள இன்றைய தலையாய கடமையாகும். *

# துளிகள்!

1992 – 95 காலகட்டத்தில் தற்போது தமிழக முதல்வராக இருக்கும் ஜெயலலிதா வருமானவரிப் படிவம் தாக்கல் செய்யாத காரணத்தால் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. அந்த வழக்கைத் தள்ளுபடி செய்யும்படி ஜெயலலிதா உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். உச்சநீதிமன்றம் அவரது மனுவைத் தள்ளுபடி செய்ததுடன், சென்னையிலுள்ள உள்ள கீழ் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள அந்த மனுவை நான்கு மாதங்களில் விசாரித்து முடிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்துள்ளது.

இதுதவிர, ஜெயலலிதா வருமானத்துக்கு மேலாகச் சொத்துக் குவித்தது சம்பந்தமாக பெங்களூர் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கையும் துரிதமாக விசாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் போது இவ்வழக்குகள் சம்பந்தமாக நீதிமன்றங்களில் ஜெயலலிதாவுக்குப் பாதகமான செய்திகள் வந்தால், அவை அவரது கட்சி வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் என்பதால், அவற்றைப் பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாம் என தமிழக அரச செய்தித்துறை அதிகாரிகள் பத்திரிகைகளிடம் 'நட்புடன்' கேட்டுக் கொண்டதாகவும், அதையும் மீறிப் பிரசுரிக்கும் பத்திாகைகளுக்கு அரச மற்றும் ஆளும் கட்சி விளம்பரங்கள் வழங்கப்படமாட்டாது என்பதை 'அன்புடன்' தெரிவித்தாகவும் செய்திகள் வந்துள்ளன.

**தமிழகத்தை மாறி மாறி ஆளும் நாயகி ஜெயலலிதாவும், நாயகன் கருணாநிதியும் எத்தனை ஊழல்கள், மோசடிகளில் புரண்டாலும், 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த தமிழினம்' அவர்களையே மாறி மாறி அரியாசனம் ஏற்றி வருகிறது!** *

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada

வானவில்

## கடைசிப் பக்க குறிப்புகள்:

# கறுப்பு ஆட்டைத் தேடும் வெள்ளாடுகள்!

சில வாரங்களுக்கு முன்னர் கனடாவில் செயல்படும் சில தமிழ் ஊடகங்கள் பற்றி கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே லீடர்' (Sunday Leader) என்னும் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பான ஆங்கில வார இதழில் **கமெலியா நத்தானியேல் (Camelia Nathaniel)** என்பவர் சில குறிப்புகளை எழுதியிருந்தார். அவை சில அதிருப்திகளையும், ஏன் கோபத்தையும், வாதப்பிரதிவாதங்களையும் கிளப்பி விட்டுள்ளன.

பொதுவாக புலம்பெயர் நாடுகளில் தமிழர்களால் நடாத்தப்படும் ஊடகங்கள் நான்கு வகைப்பட்டவனாக இருக்கின்றன.

முதலாவது வகை, நேரடியாகப் புலிகளைச் சார்ந்தவர்களால் நடாத்தப்படுபவை. இரண்டாவது வகை புலிகளின் மறைமுக ஆதரவுடன் நடாத்தப்படுபவை. மூன்றாவது வகை தம்மைப் பக்கச்சார்பற்றவையாகக் காட்டிக்கொண்டு நடாத்தப்படுபவை. நான்காவது வகை புலிகளை நேரடியாக விமர்சிக்கும் எதிர்க்கும் மாற்றுக் கருத்துகளைக் கொண்ட ஊடகங்கள்.

இதில் முதல் இரண்டு வகையும், நான்காவது வகையும் லேசாக அடையாளம் காணப்படக் கூடியவை. ஆனால் மூன்றாவது வகை ஊடகங்கள் – அதாவது பக்கச் சாபற்றவை என்று சொல்லிக்கொண்டு நடாத்தப்படுபவை – மாயமான் தோற்றம் காட்டுபவை. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

பெரும்பாலான புலம்பெயர் ஊடகங்களை நடாத்துபவர்கள் பிழைப்புக்காகவே அதைச் செய்கின்றனர். எனவே விளம்பரங்கள் அவர்களுக்கு அவசியமாகத் தேவை. புலம்பெயர் நாடுகளில் தொண்ணூறு வீதத்திற்கு மேற்பட்ட வணிக முயற்சிகள் புலிகளுக்குச் சார்பானவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே அவர்களின் தயவைப் பெறுவதானால் புலிகளுக்குச் சார்பான செய்திகளை, அவைகள் பொய்யானவைகளாக இருந்தாலும் புனைந்து வெளியிட வேண்டிய சூழலில் அவர்கள் இருக்கிறார்கள்.



அடுத்ததாக இவர்களில் சிலர் தாம் புலிகளுக்குச் சார்பானவர்கள் அல்லவென்று அடித்துக் கூறினாலும், இவர்களுக்குள் சாம்பல் பூத்த நீறாய் மறைந்து இருக்கின்ற தமிழ் இனவாதம் என்ற தீக்கங்குகள் சில வேளைகளில் இவர்களது ஊடகங்களில் வாய்வைத்துவிடும். எனவே இவர்களது நடுநிலைமை என்பது நிலைமைக்கு ஏற்ப வலதும் இடதுமாக மணிக்கூட்டு 'பெண்டுலம்' போல ஆடிக்கொண்டுதான் இருக்கும்.

இப்படியானவர்களைப் பற்றித்தான் கமெலியா நத்தானியேல் எழுதியிருக்கிறார் என ஊகிக்க முடிகிறது. அவரது எழுத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களின் மனதைத் தாக்கிக் கோபத்தை வரவழைத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. 'இதுதான் நான்' என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது, இன்னொருவர் வந்து 'இல்லை இல்லை இதுதான் அவர்' என்று சொன்னால் எவருக்கும் கோபம் வரத்தான் செய்யும்.

இது ஒருபுறமிருக்க கமெலியா நத்தானியேல் என்ற பெயரில் அந்தக் கட்டுரையை எழுதியவர் யார் என்ற ஆராய்ச்சிகளும் ஒருபக்கம் நடைபெற்று வருகின்றன. ஒருசிலருக்கு அந்தப் பெயர் உண்மைப் பெயர் அல்லவென்ற சந்தேகங்களும் தோன்றியுள்ளன. ஒன்றில் அது புனைபெயராக இருக்க வேண்டும் அல்லது உண்மையில் அந்தப் பெயரைக் கொண்டுள்ளவருக்கு கனடாவில் உள்ள யாரோ ஒருவர் தகவல்களைக் கொடுத்து எழுத வைத்திருக்க வேண்டும் என அவர்கள் கருதுகிறார்கள்.

அந்தக் கட்டுரையாளர் இந்தக் கட்டுரை மட்டுமின்றி, கனடாவில் செயல்படுகின்ற புலிகளுக்குச் சார்பானவர்கள் எனக் கருதப்படுபவர்கள், அவர்களுக்குச் சார்பான ஊடகங்கள் என்பன பற்றியும் சண்டே லீடரில் வேறு சில கட்டுரைகளும் எழுதியுள்ளார். அவற்றைப் பார்க்கும் போது அந்த எழுத்தாளர் கனடாவில் வாழ்கின்ற அல்லது கனடிய விவகாரங்களில் நன்கு பரிச்சயமுள்ளவர் என்பது புலனாகின்றது.

கனடாவில் வாழ்ந்து கொண்டு இலங்கையிலுள்ள பல ஊடகங்களுக்குத் தொடர்ச்சியாக விடயதானங்களை நீண்டகாலமாக எழுதிவரும் ஒரு பிரபல ஊடகவியலாளர் மீதும் சந்தேகிப்பவர்களின் பார்வை விழுந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. *